Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC186/2015 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | ஆறுமுகம் |
| Father's Name | -- | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 18th day of December 2020.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது அன்னை கஸ்தூரிபாய் வீதியில் குடியிருந்துவருகிறேன். நான் டாஸ்மார்க் கடையில் வேலை பார்த்துவருகிறேன். 11.08.2014 அன்று பட்டியல் சாட்சி 6 புவனேஷ்வர் அசா.1 க்கு அலைபேசிமூலமாக தகவல் சொல்ல அசா.1 என்னையும் அசா.2 பட்டியல் சாட்சி 4,5 ஆகியோரை அழைத்தன்பேரில் நாங்கள் டாஸ்மார்க் கடைக்கு சென்று பார்த்தபோது, கடையின் கதவின் பூட்டு உடைக்கப்பட்டு உள்ளே இருந்த சேல்ஸ் பணம் ரூ.4,37,580/- களவு போயிருந்தது. பின்னர் அசா.1 காவல்நிலையம் சென்று இதுசம்பந்தமாக புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

நான் டாஸ்மார்க் கடையில் உதவி விற்பனையாளராக பணியாற்றிவருகிறேன். அந்த கடையில் பொறுப்பாளர் அசா.1 மேற்பார்வையாளர் செந்தில்குமார்தான். எனக்கு அசா.1 அலைபேசிமூலமாக தொடர்பு கொண்டபோது நான் வீட்டில் இருந்தேன். எங்கள் வேலை நேரம் காலை 10 மணி முதல் இரவு 10 மணிவரை. சம்பவத்தன்று எனக்கு சுழற்சி விடுமுறை பணியில்லை. எனது கடையில் விற்பனையாளர் அசா.2 ஆவார். பணம் திருடுபோனதற்கு முக்கிய பொறுப்பாளர் அசா.1 ஆகும். டாஸ்மார்க் ல் லாக்கரில் பணத்தை நானும் அசா.1 மற்றும் 2 ஆகிய 3 பேரும் சேர்ந்துதான் வைத்தோம். அன்று நாங்கள் 3 பேர்மட்டுந்தான் பணியில் இருந்தோம். டாஸ்மார்க் ல் தினந்தோரும் வசூலாகும் தொகையை நாணய

பதிவேட்டில் குறித்துவைத்துக்கொள்வோம். இறுதியாக வசூலான தொகையை நாணய பதிவேட்டில் சூப்பர்வைசர் குறித்துவைத்துள்ளார் . நாங்கள் மூவரும்தான் லாக்கரில் பணத்தை எண்ணி வைத்தோம். சூப்பர்வைசர் சொல்லியதன்பேரில்தான் எனக்கு பணம் எவ்வளவு என்று தெரியவந்தது என்று சொல்வது சரியல்ல. இரவு வரும் மது பாட்டில்கள் ஸ்டாக் வைத்துள்ளதை பதிவு செய்வோம் என்றால் சரிதான். மதுபானங்கள் இரசீதின்பேரில்தான் விற்கப்படுகின்றன. இரசீது புக்கினை பராமரித்துவருகின்றோம். தினசரி வசூலாகும் தொகையை மண்டலம் மற்றும் மாநில மேலாளருக்கு தெரிவிப்பது வழக்கம் என்றால் சரிதான். அது குறித்து தினமும் விற்பனை அறிக்கையை அவர்களுக்கு அனுப்பிவைப்போம். சம்பவத்திற்கு முன்பு இறுதியாக பணம் வசூலான தொகையையும் அன்று அவர்களுக்கு அனுப்பிவைத்தோம் என்றால் சரிதான். நாணய பதிவேட்டில் லாக்கரில் வைக்கப்பட்ட பணத்தின் டினாமினேசனை எழுதிவைத்துள்ளோம் என்றால் சரிதான். லாக்கரில் பணத்தை மட்டுமே வைத்தோம். கவரில் போட்டு வைக்கவில்லை. டாஸ்மார்க் ல் மொத்தம் 2 அறைகள்தான். முதல் அறையில் கன்னி மூலையில் லாக்கர் அமைந்துள்ளது. லாக்கர் இரும்பினால் ஆன லாக்கர் பாக்ஸ். அந்த லாக்கரில் பணம் வைத்தது சூப்பர்வைசர்தான். லாக்கரின் பூட்டு கதவுடன் உள் கட்டமைக்கப்பட்டது. தனி இணைப்பு அல்ல. லாக்கர் சாவி அசா.1 ன் பொறுப்பில்தான் உள்ளது. லாக்கரினை பூட்டி அவர்தான் வைத்துக்கொள்வார். எங்கள் டாஸ்மார்க் ல் சிசிடிவி இல்லை. தற்போதுதான் பொருத்தியுள்ளோம். ஷட்டர் இரண்டு பூட்டு போட்டு பூட்டப்படுகிறது. அந்த பூட்டின் சாவி அசா.1 ன் வசம்தான் இருக்கும். எங்களது கடைக்கு வாட்ச்மேன் கிடையாது. எங்களது டாஸ்மார்க் ன் தென்புறமாக வெல்டிங் கடை , பேக்கரி கடை உள்ளே தள்ளி உள்ளன என்றால் சரிதான். பேக்கரி கடை இரவு வெகுநேரம் திறந்திருக்குமா என்றால், நாங்கள் பூட்டிச்செல்லும்போது அவர்களும் சென்றுவிடுவார்கள். டாஸ்மார்க் கடை பல்லடம் மெயின்

ரோட்டில் கிழக்கு பார்த்து அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி பல்லடம் ரோடு அதிக போக்குவரத்துள்ள ரோடு என்றால் சரிதான். எங்கள் டாஸ்மார்க் கடையின் வெளியே மின்விளக்கு எரிந்துகொண்டிருக்கும் என்றால் சரிதான். அசா.1 என்னை அலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல் சொல்லும்போது சுமார் அதிகாலை 7 மணியிருக்கும். நேரம் குறிப்பாக தெரியவில்லை. சம்பவத்தன்று நாங்கள் தகவல் தெரிந்து அங்கு சென்றபோது டாஸ்மார்க் கடையில் 4,5 பேர் கூடியிருந்தார்கள். நாங்கள் சென்றடைந்தபின் ஒரு அரை மணிநேரத்தில் போலிசார் அங்கு வந்துவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். நாங்கள் அங்கு வந்தடைந்தபோது சுமார் 7.30 மணியிருக்கும். போலிசார் வந்தபின்புதான் நாங்கள் கடைக்குள் சென்றுபார்த்தோம். மேஜையில் உள்ள ரேக்குகள் திறந்தநிலையில் காணப்பட்டன. பாட்டில்கள் வைக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. சம்பவ இடத்திற்கு நானும் அசா.2ம் வந்தடைந்தபோது, அசா.1 ஏற்கனவே அங்குவந்தடைந்தார். டாஸ்மார்க் கடையை ஒட்டியே தனியாருக்கு சொந்தமான மதுபான கடை உள்ளது. அந்த பாரில் சுமார் 4,5 பேர் வேலை பார்க்கிறார்கள். நாங்கள் வந்தடைந்தபோது அவர்களும் வந்திருந்தார்கள். நாங்கள் கடைசியாக கடையை பூட்டிசெல்லும்போது பாரில் வேலைசெய்பவர்களும் அங்கிருந்தார்கள். போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு புகைப்படம் எடுத்தார்கள் என்றாலும் கைரேகை பதிவுகளையும் எடுத்தார்கள் என்றாலும் சரிதான். டாஸ்மார்க் மாவட்ட மேலாளரும் அங்கு வந்திருந்தார்கள். சம்பவ இடத்தில் வைத்து போலிசாரிடம் அசா.1 நடந்த விபரங்களை கூறினார் என்றால் சரிதான். போலிசார் விசாரணையை பொருத்தவரை அவர்கள் கடையில் வந்து விசாரித்தது பற்றிதான் தெரியும்த. மேற்படி விசாரணையை குறித்து எனக்கு தெரியாது. போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துகொண்டனர். நான் சொல்வதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், நானும், அசா.1ம் அங்கு வேலைபார்த்து

வந்தவர்களும் எங்கள் சொந்த உபயோகத்திற்காக மோசடி செய்துவிட்டு மேல் அதிகாரிகளின் நடவடிக்கையை தவிர்ப்பதற்காக பணம் திருடு போனதாக பொய்புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றாலும், இவ்வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,
நடுவர் நீதிமன்றம் எண்.2
பொள்ளாச்சி

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC186/2015 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | சக்திவேல் |
| Father's Name | -- | குமாரசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 18th day of December 2020.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது ஓரக்கிளி ஊர் கிராமத்தில் வசித்துவருகிறேன். நான் நெகமம் டாஸ்மார்க் கடையில் வேலை பார்த்துவருகிறேன். 11.08.2014 அன்று காலை 6 மணியளவில் அசா.1 எனக்கு அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஷட்டர் உடைக்கப்பட்டு திருட்டு நடந்திருப்பதாக தெரிவித்து , உடனடியாக டாஸ்மார்க் கு வரச்சொன்னார். நானும் அசா.1,2 3 மற்றும் பட்டியல் சாட்சி 5 ஆனந்தகுமார் ஆகியோர் டாஸ்மார்க் வந்தடைந்தோம். பின் போலிசார் வந்தவுடன் கடைக்குச்சென்றுபார்த்தோம். நாங்கள் பார்த்தபோது பாட்டில்கள் எதுவும் களவு போகவில்லை. லாக்கர் மட்டும் உடைக்கப்பட்டு ரூ4,37,580/- பணம் களவு போயிருப்பதாக தெரியவந்தது. போலிசார் இதுபற்றி என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை

திருட்டு சம்பவம் நடந்தன்று அசா.2 கிருபாகரன் மற்றும் அசா.3 ஆகியோரும் 09.08.2014 மற்றும் 10.08.2014 தேதியில் சுழற்சி பணியில் இருந்தார்கள். நாங்கள் எல்லா நாட்களிலும் இருவர் இருவராக சுழற்சி பணியில் இருப்போம். அன்று அவர்கள் இருவரும் மட்டும் பணியில் இருந்தாாகள். நான் பணியில் இல்லை. அதனால் 9 மற்றும 10 தேதிகளில் வரவான தொகை குறித்தும் அது லாக்கரில் வைக்கப்பட்டது குறித்தும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். டாஸ்மார்க் லாக்கரில் வைக்கப்படும் பணத்திற்கு பொறுப்பாளர் அங்கு வேலை பார்க்கும் நாங்கள் அனைவரும்தான். பாட்டில் வரவு செலவுகளை ஸ்டாக்

ரெஜிஸ்டரிலும், பணவரவு செலவுகளை நாணய பதிவேட்டில் பதிவுசெய்துவருவது வழக்கம் என்றால் சரிதான். அன்று எவ்வளவு பாட்டில்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன என்பது குறித்து பில் புத்தகங்களில் கண்டிருக்கும் என்றால் சரிதான். நான் அசா.1 தொலைபேசியில் அழைப்பு விடுத்தன்பேரில் காலை சுமார் 7 மணிக்கு கடைக்கு சென்றுவிட்டேன். நான் டாஸ்மார்க் வந்தடைந்தபோது அசா.1 வந்திருந்தார். நான் வந்தடைந்தபோது, எனக்கு பின்னர் எனது கடையில் வேலைபார்த்தவர்கள் வந்தடைந்தவர்கள் வந்தார்கள். நான் வந்தடைந்தபோது பக்கத்து பாரில் வேலை பார்க்கும் புவனேஷ்வரன் மற்றும் பார் ஊழியர்கள் அங்கிருந்தார்கள் என்றால் சரிதான். நான் வந்தடைந்தபோது தகவல் கொடுத்தன்பேரில் போலிசார் சம்பவ இடம் வந்திருந்தனர். அவர்கள் வந்தபின்புதான் நாங்கள் கடைக்குள் சென்றோம். அப்போது சுமார் 7.30 மணியிருக்கும் என்றால் சரிதான். போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு புகைப்படம், கைரேகை எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். டாஸ்மார்க் பக்கத்தில் எலக்ட்ரிக் , பேக்கரி கடைகள் இருந்தன என்றால் சரிதான். நாங்கள் சம்பவ இடம் வந்தடைந்தபின்பு சுமார் 1 ½ மணிநேரத்தில் மாவட்ட செயலாளர் சிவபிரகாஷ் டாஸ்மார்க் வந்தடைந்தார். நடந்த சம்பவங்களை சம்பவ இடத்தில் வைத்து போலிசாரிடம் அசா.1 தெரிவித்தார் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், டாஸ்மார்க் ல் வேலை பார்க்கும் ஊழியர்களான நாங்கள் பணத்தை எங்கள் சொந்த தேவைக்கு மோசடி செய்துவிட்டு சட்ட நடவடிக்கைகளை தவிர்ப்பதற்காக பணம் திருடு போய்விட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2
பொள்ளாச்சி

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC186/2015 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW5 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | ஆனந்தகுமார் |
| Father's Name | -- | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 18th day of December 2020.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது வடக்கிபாளையத்தில் குடியிருந்துவருகிறேன். நான் டாஸ்மார்க் கடையில் வேலை பார்த்துவருகிறேன். 11.08.2014 அன்று காலை 8 மணியளவில் அசா.1 தொலைபேசி மூலம் கடை ஷட்டர் உடைக்கப்பட்டிருந்ததாக என்னிடம் தகவல் தெரிவித்து உடனடியாக வரச்சொல்ல நான் உடனே 9 மணிக்கு டாஸ்மார்க் வந்துவிட்டேன். அசா.1 முதல் 4 வரை வந்துவிட்டனர். போலிசாரும் தகவலின்பேரில் வந்துவிட்டார்கள். போலிசார் வந்தபின்பு நாங்கள் உள்ளே சென்றுபார்த்தோம். பார்த்தது லாக்கரில் இருந்து ரூ 4,37,580/- திருடு போயிருப்பது தெரியவந்தது. போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

டாஸ்மார்க் ல் காணாமல் போன பணம் வெள்ளி , சனிக்கிழமை வசூல் செய்யப்பட்ட பணம் என்று அசா.1 சொல்லிதான் தெரியும். மேற்படி இரு நாட்களிலும் நான் பணி சுழற்சியில் பணியில் இல்லை என்றால் சரிதான். அதனால் எவ்வளவு பணம் லாக்கரில் வைக்கப்பட்டது வசூல் செய்யப்பட்ட பணந்தான் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், டாஸ்மார்க் ல் வேலை பார்க்கும் ஊழியர்களான நாங்கள் பணத்தை எங்கள் சொந்த தேவைக்கு மோசடி செய்துவிட்டு சட்ட நடவடிக்கைகளை தவிர்ப்பதற்காக பணம் திருடு போய்விட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2
பொள்ளாச்சி